தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் (பகுதி-07) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் நிலைபேறான எரிசக்தி அதிகார சபைக்கும் இடையில் 2013 மே 08 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்ஜ 43576 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ)ii ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளது. இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளை அமுலாக்குவதற்கு பொறுப்பாக உள்ள அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதி 07 இனை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 07 இன் கீழ் நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன. தூய மின்சக்தி வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சாரத்தை விநியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகத்தன்மையினையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 200 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 378.6 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 3.00 மில்லியன் செயற்திட்டத்தின் பகுதி – 07 இற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் அனைத்து பகுதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதி ஒழுங்கமைப்புக்கள் கீழே காட்டப்பட்டவாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| **மூலம்** | **ஐ.அ.டொலர் (மில்லியன்)** | **இலங்கை ரூபா. (மில்லியன்)** |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | |
| - ஆசிய அபிவிருத்தி நிதியம் (2003 மே 08 இன் 2892 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன்) | 30.00 | 3,786.00 |
| - சாதாரண மூலதன வளங்கள் (2013 மே 08 இன் 2893 எஸ்ஆர்ஜஎஸ்எவ் ஆம் இலக்க கடன்) | 100.00 | 12,620.00 |
| - தூய சக்தி நிதியம் (2013 ஆகஸ்ட் 08 இன் 0303 எஸ்ஆர்ஜஈஎவ் ஆம் இலக்க மானியம்) | 1.50 | 189.30 |
| **இலங்கை அரசாங்கம்** | 68.50 | 8,644.70 |
| | 200.00 | 25,240.00 |

செயற்திட்டமானது அதனுடைய நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் 30 ஆந் வரை பின்னர் நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டு நிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதிகளிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டுள்ளதா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியங்களில் குறிப்பிடப்பட்ட மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியாதிருந்தது என்றும்,

(ஊ) கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(எ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) செயற்திட்ட மற்றும் மானிய உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 யூலை 18 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீடு நியமம் 01 – நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் இன் பந்தி 19 இனால் வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான முகாமைத்துவப் பொறுப்பு கூற்று செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்**

ரூபா 23.01 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் இலங்கை மத்திய வங்கியின் 02 கட்டுநிதிக் கணக்குகளில் கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்தது. எனினும், அதற்கான நேரொத்த அறிக்கைகள் மீதிகளை இணக்கஞ்செய்வதற்கும் கணக்குகளிற்கு கொண்டு வருவதற்கும் காலக்கிரமத்தில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2016 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு மற்றும்

திரண்ட செலவினம் என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **மூலம்** | **மானிய மற்றும் கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற் கான வருடாந்த பாதீட்டில் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு** | **பயன்படுத்திய நிதிகள்** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
| | **ஐ.அ.டொ. மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொ. மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொ. மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| **ஏடீபீ எல்2892/2893** | 1.50 | 189.30 | 65.50 | 0.30 | 45.60 | 0.30 | 45.60 |
| **ஏடீபீ மானியம் 313** | 1.50 | 189.30 | 34.00 | 0.30 | 50.00 | 0.40 | 62.00 |
| **இலங்கை அரசாங்கம்** | 0.08 | 10.00 | 1.00 | 0.20 | 2.30 | 0.02 | 2.90 |
| **மொத்தம்** | **3.08** | **388.60** | **100.00** | **0.80** | **97.90** | **0.72** | **110.50** |

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

அமுலாக்கல் திட்டங்களின் பிரகாரம், பொது தனியார் பங்குடமை உடன்படிக்கைகளின் கீழுள்ள பொது கட்டிடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் தொடர்பான கூரை முறைகைளை ஸ்தாபிப்பதற்கான தேர்வுகளையும், ஹொட்டல், தனியார் தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் போன்ற ஏனைய தனியார் நிறுவனங்களினை சூரியஒளி கூரையில் நிலைபெறுதகு தனியார் துறை பங்குபற்றலிற்காக உறுதிப்படுத்துகையும் உள்ளடக்கிய சூரியஒளி கூரை மின்வலு உற்பத்தி முன்னோட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு செயற்திட்டமானது நடவடிக்கை எடுக்க வேண்டும். கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், பேராதெனிய, யாழ்ப்பாணம், றுகுணு மற்றும் மொறட்டுவ போன்ற 04 தேசிய பல்கலைக்கழகங்களின் சூரியஒளி கூரை முறைமைகளை பொருத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் நன்மை பெறும் நிறுவனங்களிற்காக மானியங்களாக செயற்திட்டத்தால் ரூபா 77.16 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. மேலும், நன்மை பெறும் நிலுவைகளாக தெரிவு செய்யப்பட்ட 18 தனியார் அபிவிருத்தியாளர் கம்பனிகளில் சூரியஒளி மின்வலு முறைமையின் ஸ்தாபித்தலிற்காக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 தனியார் நிறுவனங்களில் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், அனுமதிபெற்ற வர்த்தக வங்கியினூடாக உரிய நிறுவனங்களிற்கான கடன்களாக ரூபா 45.66 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு, நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.